மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
திருக்கழுக்குன்றம்

**அ.வ.எண்.6/2007**

**DW -1**

| | | |
|---|---|---|
| பெயர் : சேகர் | த/பெ.எட்டி நாயகர் | நாள் 24-02-2026 |

**பி.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

நான் கரியச்சேரியில் குடியிருந்து வருகிறேன். வழக்கு சொத்தானது முள்ளிக்கொளத்தூரில் உள்ளது. தாவா சொத்திலிருந்து எங்கள் ஊர் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 200 மீட்டர் இருக்கும். தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் என்ன என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்தை எனக்கு விற்பனை செய்தவர்கள் எப்படி அந்த சொத்திற்கான உரிமை மூலம் உள்ளது என்றால் பூர்வீக சொத்து மற்றும் கிரையம் வாங்கிய சொத்து என்றும் எனக்கு சொன்னார்கள். அந்த கிரைய பத்திரத்தை நான் பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன். கிரைய பத்திரத்தை என்னிடம் கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. அந்த சொத்து கூட்டு சொத்து என்பதால் கொடுக்கவில்லை. கூட்டு சொத்து என்றால் மற்ற சர்வே நெம்பரும் அதில் இருக்கும். அதில் நான் கிரையம் வாங்கிய சொத்து மற்றும் நான் கிரையம் வாங்காத சொத்து என்ன என்ன இருக்கிறது என்றால் எனக்கு கிரையம் வாங்கிய சொத்து மட்டும் தான் தெரியும். கிரையம் வாங்காத சொத்து குறித்து எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கிய சொத்திற்கான பத்திரத்தில் உள்ள சர்வே எண்கள் விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு பக்கத்தில் நான் மற்றவர்களிடமிருந்து கிரையம் வாங்கிய சொத்துக்கள் உள்ளது. நான்

கிரையம் பெறுவதற்கு முன்பாக தாவா சொத்திற்கு பக்கத்தில் எனக்கு எந்த சொத்தும் இல்லை. வழக்கு சொத்தை சாபியா பீ, அமினா பீ, மற்றும் அவர்களது வாரிசுதாரர்களிடமிருந்து 3 கிரைய பத்திரம் மூலமாக கிரையம் வாங்கினேன். அந்த வாரிசுதாரர்கள் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் சகிராபானு, காதர் பாஷா, ஆயிஷா மற்றவர்களின் பெயர் ஞாபகம் இல்லை. வாதிக்கும் நான் கிரையம் பெற்ற நபர்களுக்கும் என்ன உறவு என்றால் எனக்கு தெரியாது. சொத்து வாங்கும் போது என்ன உறவு என்று எனக்கு தெரியாது. தற்போது அவர்கள் உறவினர்கள் என்று எனக்கு தெரியும். வாதி தரப்பிலிருந்து எனக்கு வழங்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அனுப்பினேன். அந்த பதில் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு நீதிமன்றத்திலிருந்து தான் எனக்கு சம்மன் வந்தது. (சாட்சி நீதிமன்றத்தில் அனுப்பிய சம்மனை வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பு என்று தவறாக புரிந்துக் கொண்டு பதில் அளித்ததாக கூறுகிறார்) வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் நான் வாங்கவில்லை. தெய்வலிங்க முதலியார் என்பவரை எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 ஆவணம் 11.01.2021 அன்று பெறப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். அந்த தேதியானது கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட தேதி ஆகும். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் 18.01.2021 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை பட்டா எண் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்தின் கிணறானது 2007 ல் தான் எடுக்கப்பட்டது என்றால் நான் கிணறு எடுத்தேன். தாவா சொத்தை வாதியிடமிருந்து கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். சாபியா பீ,

அமினா பீ, மற்றும் அவர்களது வாரிசுதாரர்களிடமிருந்து கிரையம் வாங்கினேன். தற்போது எனக்கு 55 வயதாகிறது. நான் 2006 ம் ஆண்டு முதல் நத்தம் கரியசேரி ஊராட்சியின் தலைவராக தற்போது வரை இருந்து வருகிறேன். முள்ளிக்கொளத்தூர் கிராமம் அந்த ஊராட்சியின் கீழ் இல்லை. எனக்கு கிரையம் கொடுத்தவர்களுக்கு வழக்கு சொத்தில் உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தானது முதல் வாதியான T.H.உசேன் அவருடைய சுய சம்பாத்தியத்தில் வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. முதல் வாதியான T.H.உசேன்னுக்கு நான் சாபியா பீ, அமினா பீ, மற்றும் அவர்களது வாரிசுதாரர்களிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தில் பங்கு உள்ளது என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற சொத்தில் 9 ல் 7 பகுதி நான் கிரையம் பெற்ற நபர்களுக்கும் 9 ல் 2 பகுதி முதல் வாதியான T.H.உசேன்னுக்கு உரிமை உள்ளது என்றால் நான் கிரையம் பெற்ற சொத்தில் T.H.உசேன்னுக்கு உரிமை இல்லை. அவருடைய பாகத்தை விட்டுவிட்டு தான் நான் கிரையம் வாங்கினேன். வழக்கு சொத்தில் 9 ல் 2 பாகத்தை T.H.உசேன்னின் பொது அதிகார முகவரான கன்னிமுத்து என்பவர் மூலமாக 12.11.2001 அன்று பத்திர எண். 2685/2001 மூலமாக நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் மொத்தமாக வாங்கவில்லை. நான் வாங்கிய சொத்தின் விஸ்தீரணம் சுமாராக 1 ஏக்கருக்கு மேல் இருக்கும். சரியாக விஸ்தீரணம் என்னால் சொல்ல முடியவில்லை. T.H.உசேன் மீதமுள்ள சொத்தினை 3 வது நபருக்கு கிரையம் செய்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது. சாபியா பீ, அமினா பீ, மற்றும் அவர்களது வாரிசுதாரர்களிடமிருந்து நான் கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தில் பூர்வீக சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் மற்றும் எங்கள் பாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், எங்கள் தாயாதிகள் நிலங்கள் போக என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். நான் ச.எண். 103/1 ல் நான் கிரையம் வாங்கவில்லை என்றால் சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. சர்வே எண். 103/1 நிலமானது நான் கிரையம் பெற்ற வழக்கு சொத்தில் இருக்கிறதா என்றால் சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. நான் வழக்கு தாவா சொத்தினை உண்மையான உரிமையாளர்களிடமிருந்து கிரையம் பெறவில்லை என்பதால் நான் வழக்கு சொத்தை அனுபவிக்க எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தை வாதியிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு நான் எந்த காலத்திலும் உரிமையாளர் அல்ல என்றால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்டு தட்டச்சரால் நீதிமன்றத்தில் செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரியென்று ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

(Sd) S.Vineeth,
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர், திருக்கழுக்குன்றம்